முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2020 சனவரி

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2020-01-19
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 2 இன்படி, ஒவ்வொரு வரிமதிப்பாண்டிற்குமான வருமான வரியானது:

- அவ்வாண்டிற்கு வரிவிதி வருமானத்தைக் கொண்டுள்ள ஆள் ஒருவரால், அல்லது
- அவ்வாண்டுக் காலப்பகுதியில் இறுதி நிறுத்தி வைத்தல் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் ஆள் ஒருவரால்

செலுத்தப்படுதல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) இறுதி நிறுத்தி வைத்தல் கொடுப்பனவுகள் என்பதன் மூலம் கருதப்படுவது என்ன என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ், இறுதி நிறுத்தி வைத்தல் கொடுப்பனவுகள் இரண்டினை (02) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

நீங்கள் பாரிய அளவில் ஆடைகளைத் தயாரிக்கின்ற **ஏஜீ காமன்ஸ் தனியார் கம்பனியில்** புதிதாக நியமிக்கப்பட்ட ஊதியக் (payroll) கணக்காளர் ஆவீர்கள். உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அண்மையில் ஆவணங்களைப் பரிசோதனை செய்து உழைக்கும்போதே செலுத்துதல் (PAYE) திட்டத்தின் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தியதாக கம்பனி முகாமை தங்களுக்கு அறியத் தந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

உழைக்கும்போதே செலுத்துதல் திட்டத்தின் கீழ் தொழில்தருநரின் கடப்பாடுகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட எக்ஸ்வைஇசற் பொதுக் கம்பனியில் சமரசிங்க** 20 வருடங்களாக முகாமையாளராகப் பணியாற்றுகிறார். 2018/19 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் அவர் சத்திரசிகிச்சையொன்றிற்கு உட்பட்டதுடன் அவரது நீண்டகாலச் சேவையைக் கருத்திற்கொண்டு கம்பனி அவருக்கு ரூபா 1 மில்லியன் விசேட கொடுப்பனவொன்றை மேற்கொண்டது.

**சமரசிங்க** அது தொழில்தருநரிடமிருந்தான பரிசொன்று எனவும் அது வரிவிதி வருமானத்தின் ஒரு பகுதி அல்ல எனவும் கருதுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கம்பனியிலிருந்து பெற்றுக்கொண்ட விசேட கொடுப்பனவு **சமரசிங்கவின்** வரிவிதி வருமானம் ஆகுமா என்பதை **விபரிக்குக.**
*(தங்களது முடிவுக்குச் சார்பாக தீர்வு காணப்பட்ட ஏதாவது வழக்கொன்றின் தொடர்பினைக் குறிப்பிடுக)*(05 புள்ளிகள்)

## வினா 04

**ஹீரோ கோப்பரேஷன் இந்தியா** அதன் இலங்கைச் செயற்றிட்ட அலுவலகத்தின் ஊடாக இலங்கையில் நிருமாணச் செயற்றிட்டம் ஒன்றைப் பொறுப்பேற்றுக் கொண்டது. தொழில்நுட்பப் பொறியியலாளரான **ரொபின்** இரண்டு வருட காலத்திற்கான ஊழிய ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பொறியியலாளர் ஒருவராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக 2018 யூலை 15 ஆந் திகதி இலங்கைக்கு வருகை தந்ததுடன் 2019 மார்ச் 02 ஆந் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டு தொடர்பில் இலங்கையில் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **ரொபின்** உடைய வதிவு அந்தஸ்தினை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**தயாரத்ன** மற்றும் அவரது மூத்த மகன் **டிலும்** ஆகியோர் வெதுப்பகப் (Bakery) பொருட்கள் தயாரிப்பாளர்களாகச் செயற்படுவதற்கு 2017 இல் **டீ அன்ட் சன்ஸ்** என்ற பங்குடமையை உருவாக்கினர். பங்குடமை உடன்படிக்கையின்படி, இலாப, நட்டங்களை **தயாரத்ன** மற்றும் **டிலும்** ஆகியோருக்கிடையே முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பாடாகி இருந்தது.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி பங்குடமையின் விற்பனை மற்றும் நிகர இலாபம் முறையே ரூபா 46,550,000/- மற்றும் ரூபா 9,638,000/- ஆகும்.

(1) நிகர இலாபத்தை அடையும்பொழுது பின்வரும் செலவுகள் கழிக்கப்பட்டிருந்தன:

| | ரூபா |
|---|---|
| பங்காளருக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் | 2,880,000 |
| வாடகை | 960,000 |
| பெறுமானத்தேய்வு | 80,000 |

(2) **தயாரத்ன** மற்றும் **டிலும்** ஆகியோர் வியாபாரத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்காக மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 110,000/- மற்றும் ரூபா 130,000/- பெற்றுக் கொண்டனர்.

(3) **தயாரத்னவின்** வதிவிடத்தின் முதலாம் மாடியை பங்குடமையின் அலுவலகமாகப் பாவித்தமைக்காக அவருக்கு வாடகை செலுத்தப்பட்டது.

(4) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வரி நோக்கத்திற்காக சொத்துக்கள் மீதான மூலதன விடுதொகை ரூபா 90,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்காகப் பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) வரி நோக்கத்திற்காக பங்குடமை வருமானம் (03 புள்ளிகள்)

(b) பங்குடமை வருமானம் மீது பங்குடமையால் செலுத்தப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி (02 புள்ளிகள்)

(c) ஒவ்வொரு பங்காளரதும் பங்குடமை வருமானத்தின் பங்கு (03 புள்ளிகள்)

(d) ஒவ்வொரு பங்காளருக்கும் உரித்தான நிறுத்தி வைத்தல் வரி வரவு (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

***வரை. பீஏ கன்சல்டன்ஸ் தனியார் கம்பனி*** பெறுமதிசேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றாகும். இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குவது அதன் பிரதான செயற்பாடாகும். அதற்கு மேலதிகமாக உயர்தொழில் (professional) பரீட்சைகளுக்கான வகுப்புகளையும் கம்பனி நடாத்துகின்றது.

கம்பனியின் ஏடுகளிலிருந்து 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) புரள்வு (turnover) விபரங்கள் (பெ.சே.வ. தவிர்த்து):

| | ரூபா |
|---|---|
| ஆலோசனைச் சேவைகளிலிருந்து | 7,425,000 |
| கல்விச் சேவைகளிலிருந்து – வகுப்புகளை நடத்துதல் | 1,856,250 |
| **மொத்தம்** | **9,281,250** |

(2) காலாண்டுப் பகுதியில் கம்பனி பின்வரும் உள்ளீட்டு வரியைச் செலுத்தியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| வகுப்புகளுக்கான கையேடுகளைப் பதிப்பித்தல் மீது | 143,000 |
| அலுவலகச் செலவுகள் மீது (அலுவலகம் இரு செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது) | 264,000 |
| பிரயாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் காருக்காகச் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணத்தின் மீது | 9,000 |
| | **416,000** |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மேலதிக உள்ளீட்டு பெ.சே. வரித் தொகை ரூபா 57,600/- ஆகும்.

(4) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக பெ.சே.வ. தவணைக் கட்டணங்களாக கம்பனி செலுத்திய தொகை ரூபா 400,000/-.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு பெ.சே.வ. திரட்டினைச் சமர்ப்பிக்க வேண்டிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரை. ஏபிசீ தனியார் கம்பனி** இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வதிவுள்ள கம்பனி ஒன்றாகும். கம்பனி 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமான வரித் திரட்டினை (return of income) இதுவரை சமர்ப்பிக்கவில்லை. நீங்கள் **வரையறுக்கப்பட்ட ஏபிசீ தனியார் கம்பனியின்** வரி ஆலோசகர் ஆவீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வருமான வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வருமான வரித் திரட்டினைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அதற்காக விதிக்கப்படத்தக்க தண்டங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) 2018/19 ஆம் வரி மதிப்பாண்டிற்கான வருமான வரித் திரட்டு உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின், உதவி ஆணையாளரால் வரி மதிப்பீடொன்றை அனுப்புவதற்கான சட்ட ரீதியான கால வரையறையைக் (time bar) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(d) செலுத்தத் தவறிய வரி மதிப்பீடு (default assessment) என்பதன் கருத்தினை **விளக்குக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரை. ஸ்மாட் லுக் தனியார் கம்பனி (SLP)** 2014 இல் **வரை. பெஷன் டிசைனர்ஸ் ஹோல்டிங்ஸ் (FDH)** இன் பூரண உரிமையுடைய துணைக் கம்பனியாக நிறுவப்பட்டது. **வரை. ஸ்மாட் லுக் தனியார் கம்பனி** குழந்தைகளின் ஆடைகளைத் தயாரிப்பதுடன் அவற்றை உள்ளூர்ச் சந்தைக்கு விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

**SLP** யின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

(1) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றின் சுருக்கம் பின்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| புரள்வு (விற்பனை) | 368,150,000 |
| விற்பனைக் கிரயம் | (254,250,000) |
| **மொத்த இலாபம்** | **113,900,000** |
| ஏனைய வருமானம்: | |
| **FDH** க்குக் கொடுக்கப்பட்ட கடனிலிருந்தான வட்டி வருமானம் | 200,000 |
| நிலையான வைப்பிலிருந்தான வட்டி வருமானம் (மொத்தம்) | 800,000 |
| பங்கிலாப வருமானம் (நிகர) | 500,000 |
| இயந்திர விற்பனை மீதான இலாபம் | 600,000 |
| | **116,000,000** |
| விநியோகச் செலவுகள் | (27,300,000) |
| நிருவாகச் செலவுகள் | (51,780,000) |
| நிதிச் செலவுகள் | (2,400,000) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | **34,520,000** |

(2) நிருவாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 2,900,000/- ஆவதுடன் ஆண்டின் காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,000,000/- ஆகும்.
- ஆண்டிற்காகத் தாக்கல் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு ரூபா 3,500,000/- ஆகும்.
- உதவி ஆணையாளருடன் அடையப்பெற்ற உடன்பாட்டின்படி 2017/18 ம் வரிமதிப்பாண்டிற்காக திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட மேலதிக வரி ரூபா 340,000/- ஆகும்.
- அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமான முதியோர் இல்லத்திற்கு கம்பனி நன்கொடையாக வழங்கிய பொருட்களின் பெறுமதி ரூபா 850,000/- ஆகும்.

(3) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வெளிநாட்டுப் பொருட்கள் வழங்குநர்களைச் சந்திப்பதற்காக பணிப்பாளர்களின் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 1,100,000/- ஆகும்.
- காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான பத்திரிகை விளம்பரத்திற்கு ரூபா 90,000/- உம் துணிகள் வழங்குநர்களைத் தேடுவதற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய விலைமனுக் கோரல் மீது ரூபா 110,000/- உம் செலவிடப்பட்டன.
- ஊழியர்களைக் களிப்பூட்டுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த ஒன்றுகூடல் மீது ஏற்பட்ட செலவு ரூபா 350,000/- ஆகும்.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு:

**கிரயம்**

| **சொத்துக்கள்** | **2018 ஏப்ரல் 01 இல் மீதி (ரூபா)** | **சேர்த்தல்கள் (ரூபா)** | **விற்பனைகள் (ரூபா)** | **2019 மார்ச் 31 இல் மீதி (ரூபா)** |
|---|---|---|---|---|
| காணி | 28,000,000 | - | - | 28,000,000 |
| கட்டடம் | 15,000,000 | - | - | 15,000,000 |
| இயந்திரம் | 4,000,000 | 5,200,000 | 900,000 | 8,300,000 |
| மோட்டார் லொறி | 3,400,000 | - | - | 3,400,000 |
| **மொத்தம்** | **50,400,000** | **5,200,000** | **900,000** | **54,700,000** |

- 2017 மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்றை கம்பனி 2018 டிசெம்பரில் ரூபா 600,000/- இற்கு விற்பனை செய்தது.

- கட்டடம் மற்றும் மோட்டார் லொறி 2016/17 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் கொள்வனவு / கையகப்படுத்தப்பட்டது.

- 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்த ஏனைய எல்லாச் சொத்துக்கள் தொடர்பாகவும் வரி நோக்கத்திற்காக மூலதன விடுதொகை பூரணமாகக் கோரப்பட்டுள்ளது.

(5) 2017/18 ம் வரிமதிப்பாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட வரிவிதிக்கத்தக்க நட்டம் ரூபா 6,300,000/- ஆகும்.

(6) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணக் (ESC) கொடுப்பனவு ரூபா 1,840,750/- ஆக இருந்தது.

(7) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்காக கம்பனி செலுத்திய காலாண்டு வருமான வரித் தவணைக் கட்டணங்கள் ரூபா 3,400,000/- ஆகும்.

(8) நிலையான வைப்பு வட்டிமீது வங்கியால் உரிய வீதத்தில் நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்பட்டிருந்தது.

(9) வியாபாரத்தின் ஏனைய எல்லாச் செலவுகளும் வருமான வரி நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்டவை ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வரி

**மு.கு.:** ஏதேனும் செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

மென்பொருள் பொறியியலாளரான **சுரேஸ்** இலங்கை மென்பொருள் கம்பனியான **ஸீனா PLC (வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி)** யில் பணி புரிகின்றார். அவர் தனது முதன்மை ஊழிய வெளிப்படுத்தலை **ஸீனா PLC இற்கு** வழங்கியிருந்தார். அவர் **ஸீனா PLC இன்** துணைக் கம்பனி ஒன்றின் பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு (இதன் பின்பு ஆண்டு எனக் குறிப்பிடப்படும்) **சுரேஸ்** தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டின் காலப்பகுதியில் **ஸீனா PLC இலிருந்து** பின்வருவனவற்றை அவர் பெற்றுக் கொண்டார்:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 220,000/-.

- அவரது பிரயாணத்திற்காக கம்பனி எரிபொருளுடன் கார் ஒன்றை வழங்கியிருந்தது. (காரின் இயந்திர வலு 1750cc ஆகும்).

- ஆண்டின் காலப்பகுதியில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மொத்த கட்டணச் சிட்டை ரூபா 254,000/- ஆகும். ஊழிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கம்பனி ரூபா 230,000/- இனை மீளச் செலுத்தியிருந்தது. வைத்தியச் செலவுகளை மீளச் செலுத்துதல் தொடர்பாக எல்லா ஊழியர்களுக்கும் சமமான விதிமுறைகளை மேற்கொள்ளும் கொள்கை எதனையும் கம்பனி கொண்டிருக்கவில்லை.

- முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்படாத விடுப்புகளுக்காகச் (லீவு) செலுத்தப்பட்ட விடுப்புக்கு ஈடான பணம் ரூபா 70,000/- ஆகும்.

- ஊழியர் சேம நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) என்பவற்றிற்கான தொழில்தருநரின் பங்களிப்பு முறையே மொத்தச் சம்பளத்தில் 12 % மற்றும் 3 % ஆகும்.

(2) **சுரேஸ்** ஆண்டிற்காக துணைக் கம்பனியிலிருந்து (இரண்டாவது ஊழியம்) பணிப்பாளர் கட்டணமாக நிறுத்திவைத்தல் வரி ரூபா 84,000/- கழிக்கப்பட்ட பின் ரூபா 636,000/- பெற்றுக் கொண்டார்.

(3) **சுரேஸ்** வெளிநாட்டுக் கம்பனியொன்றிற்கு வழங்கிய ஆலோசனைச் சேவைக்கான கட்டணமாக 2,500 அமெரிக்க டொலர் பெற்றுக் கொண்டார். இவ்வருமானமானது வர்த்தக வங்கியொன்றில் அவரது வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் (RFC) வரவு வைக்கப்பட்டது.
(1 அமெரிக்க டொலர் = ரூபா 180/-).

(4) அவர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியில் முதலீடு செய்திருந்தார். ஆண்டின் காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட நிகரப் பங்கிலாபம் ரூபா 215,000/- ஆவதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பங்குகள் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் ரூபா 153,000/- ஆகும்.

(5) ஆண்டின் காலப்பகுதியில் வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து பெற்ற வட்டி வருமானம் 170 அமெரிக்க டொலர் (நி.வை.வ. கழித்த பின்னரான நிகர) ஆகும்.
(1 அமெரிக்க டொலர் = ரூபா 180/-).

(6) **சுரேஸ் நுகேகொடையில்** உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றில் வசிக்கின்றார். காலியில் உள்ள அவரது பரம்பரை வீடு சோலைவரிக்காக ரூபா 250,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. சோலை வரி 25% இல் செலுத்தப்பட்டது. இவ்வீடானது 2018 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து கம்பனியொன்றிற்கு ரூபா 100,000/- மாதாந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான வாடகை ஒவ்வொரு மாத முடிவிலும் செலுத்தப்பட்டது. கம்பனி மாதாந்த வாடகையைச் செலுத்தும்பொழுது நிறுத்திவைத்தல் வரியைக் கழித்துக் கொண்டது.

(7) ஆண்டின் காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் பாவனைக்காக மொரட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு அவர் ரூபா 800,000/- பெறுமதியான கணினிகளை நன்கொடையாக வழங்கினார்.

(8) **ஸீனா PLC** யினால் ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட உ.பொ.செ. (PAYE) ரூபா 164,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **சுரேசுக்கு** பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின் (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |